20.01.2026

O.S.No. 363/2019

DW1– கருப்பையா – த/பெ. முப்புலி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 20.01.2026

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u> ( வாதி தரப்பில்)

5. 2ம் பிரதிவாதி எனது சகோதரர் என்றால் சரிதான். அவர் பிறப்பித்த கிரையஆவணம் 2013ம் ஆண்டு கிரைய ஆவணம் செல்லாது என இந்த வழக்கு தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரிதான். பட்டாவிலும் பிராது தபசில் சொத்திற்கான பெயர் வாதியின் பெயரில் உள்ளது என்றால் சரிதான். எனக்கும் வாதிக்கும் நீர்பாசனம் தொடர்பாக தகராறு உண்டு என்றால் இல்லை, தற்போது சாட்சி காவல்நிலையத்தில் பேசி தீர்த்துக்கொண்டோம் என கூறினார்.

6. நான் தற்போது சாட்சியத்தில் வாதிக்கு கிரையம் கொடுத்தது செல்லாது என சொல்கிறேன் என்றால் சரிதான். சர்வே எண்.113/8ல் வாதிக்கும் பங்கு உள்ளது என்றால் சரிதான். மேற்படி புல எண்ணுக்கு கிழக்குபக்கம் தான் வாதிக்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளது என்றால் சரிதான். 2011–12ல் வாதிக்கு கிரையம் கொடுத்தபின்புதான் 2019ம் ஆண்டு சீர்திருத்தம் கேட்டேன் என்றால் சரிதான்.

7. 2ம் பிரதிவாதி, எனக்கு 2009ம் ஆண்டில் ஒரு அடமானம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி அடமான ஆவணத்தின் தபசில் விவரத்தில் சர்வே எண்.113/17பி என உள்ளது என்றால் சரிதான். மேற்படி அடமான ஆவணத்தை செல்லடித்து விட்டோம் என்றால் சரிதான்.

1ம் தபசில் 2ம் அயிட்டத்தில் 2ம் பிரதிவாதிக்கும் நீர்பாசன உரிமை உண்டு என்றால் சரிதான்.

8. எனது எதிர்வழக்குரையில் வாதி வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்துவருவதாக கூறியிருப்பதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி